## இயல் 6.3 - விகிதம்

### பயிற்சி எண் :: 6.3.2.4.A

பல்வகை திறனறிதல் - பயிற்சி

### வினா

மிதிவண்டி, இருசக்கர வாகனம், மற்றும் பேருந்து ஆகியவற்றின் உகந்த வேகங்கள் மணிக்கு முறையே 15 கி.மீ, 40 கி.மீ மற்றும் 70 கி.மீ. ஆகும். இவற்றிலிருந்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. மிதிவண்டி மற்றும் இருசக்கர வாகனம், இவற்றின் உகந்த வேகங்களின் விகிதத்தை எளிய வடிவில் காண்க.
2. இருசக்கர வாகனம் மற்றும் பேருந்து, இவற்றின் உகந்த வேகங்களின் விகிதத்தை எளிய வடிவில் காண்க.
3. மிதிவண்டி மற்றும் பேருந்து, இவற்றின் உகந்த வேகங்களின் விகிதத்தை எளிய வடிவில் காண்க.
4. இம்மூன்று விகிதங்களில் எது மிகச்சிறிய விகிதம்?

### துணை வினா எண் :: 1

மிதிவண்டி மற்றும் இருசக்கர வாகனம், இவற்றின் உகந்த வேகங்களின் விகிதத்தை எளிய வடிவில் காண்க.

மிதிவண்டியின் உகந்த வேகம்} = 15 கி.மீ/மணிக்கு

இருசக்கர வாகனத்தின் உகந்த வேகம்} = 40 கி.மீ/மணிக்கு

அவற்றின் விகிதம்} ⇒ 15 : 40

இவ்விகிதம் பின்ன வடிவில்} ⇒ $\frac{15}{40} = \frac{(15 \div 5)}{(40 \div 5)}$

விகிதம் எளிய வடிவில்} = $\frac{3}{8}$

மிதிவண்டி மற்றும் இருசக்கர வாகனம், இவற்றின் உகந்த வேகங்களின் விகிதம் எளிய வடிவில் → 3 : 8

### துணை வினா எண் :: 2

இருசக்கர வாகனம் மற்றும் பேருந்து, இவற்றின் உகந்த வேகங்களின் விகிதத்தை எளிய வடிவில் காண்க.

இருசக்கர வாகனத்தின் உகந்த வேகம்} = 40 கி.மீ/மணிக்கு

பேருந்தின் உகந்த வேகம்} = 70 கி.மீ/மணிக்கு

அவற்றின் விகிதம்} ⇒ 40 : 70

இவ்விகிதம் பின்ன வடிவில்} ⇒ $\frac{40}{70} = \frac{(40 \div 10)}{(70 \div 10)}$

விகிதம் எளிய வடிவில்} = $\frac{4}{7}$

இருசக்கர வாகனம் மற்றும் பேருந்து, இவற்றின் உகந்த வேகங்களின் விகிதம் எளிய வடிவில் → 4 : 7

### துணை வினா எண் :: 3

மிதிவண்டி மற்றும் பேருந்து, இவற்றின் உகந்த வேகங்களின் விகிதத்தை எளிய வடிவில் காண்க.

மிதிவண்டியின் உகந்த வேகம்} = 15 கி.மீ/மணிக்கு

பேருந்தின் உகந்த வேகம்} = 70 கி.மீ/மணிக்கு

அவற்றின் விகிதம்} ⇒ 15 : 70

இவ்விகிதம் பின்ன வடிவில்} ⇒ $\frac{15}{70} = \frac{(15 \div 5)}{(70 \div 5)}$

விகிதம் எளிய வடிவில்} = $\frac{3}{14}$

மிதிவண்டி மற்றும் பேருந்து, இவற்றின் உகந்த வேகங்களின் விகிதம் எளிய வடிவில் → 3 : 14

### துணை வினா எண் :: 4

இம்மூன்று விகிதங்களில் எது மிகச்சிறிய விகிதம்?

மூன்று விகிதங்கள் முறையே} ⇒ 3 : 8   4 : 7   3 : 14

மூன்று விகிதங்கள் பின்ன வடிவம்} ⇒ $\frac{3}{8} \quad \frac{4}{7} \quad \frac{3}{14}$

அவற்றை ஒரே பகுதிகள் கொண்ட பின்னங்களாக மாற்றுதல்} ⇒ $\frac{3 \times 7}{8 \times 7} \quad \frac{4 \times 8}{7 \times 8} \quad \frac{3 \times 4}{14 \times 4}$

மூன்று விகிதங்களும் ஒரே பகுதிகள் கொண்ட பின்ன வடிவம்} ⇒ $\frac{21}{56} \quad \frac{32}{56} \quad \frac{12}{56}$

மூன்று விகிதங்களில் சிறிய விகிதம், பின்ன வடிவில்} ⇒ $\frac{12}{56}$

அதன் எளிய வடிவம்} ⇒ $\frac{12}{56} = \frac{12 \div 4}{56 \div 4} = \frac{3}{14}$

மூன்று விகிதங்களில் மிகச்சிறிய விகிதம் → 3:14 ஆகும். அதாவது, மிதிவண்டியின் உகந்த வேகத்திற்கும் பேருந்தின் உகந்த வேகத்திற்கும் இடையில் உள்ள விகிதம் ஆகும்.

Sum & solution prepared on Sunday 6th June, 2021 :: 19:09 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.